# பில்கிஸ் பானு வழக்கும் – ராஜதர்மமும்!


சிலந்தி

**“நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. இருள் சூழ்ந்த வேளையில் நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாக உச்சநீதிமன்றத் தீர்ப்பு அமைந்திருக்கிறது.”**

– பில்கிஸ் பானு வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு குறித்து தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ள இந்தக் கருத்துகளை ஆழ்ந்து நோக்கினால், சமீபகாலமாக எல்லாத் துறைகளும் பா.ஜ.க. ஆட்சியில் சீரழிந்து – சின்னாபின்னமாகி இருள் சூழ்ந்து கிடக்கும் நிலைகுறித்து அவருடைய ஆழ்மனதின் அங்கலாய்ப்பை உணரமுடியும்!



பல நேரங்களில் முதல்வர் குறிப்பிட்ட இருள்சூழ்ந்த நிலைமற்ற துறைகளைப் போல நீதித்துறையையும் விட்டுவைக்கவில்லை! சர்வாதிகாரத்தின் ‘ஆக்டோபஸ்’ கரங்கள் நீதித்துறையையும் வளைத்திடத் தொடங்கிய கொடூரம் பல நேரங்களில் கண்கூடாகவே தெரிய ஆரம்பித்தது.

**“ஜனநாயகம் ஆபத்தில் இருக்கிறது. நிலைமைகள் சரியாக இல்லை”** (Democracy at stakes; Things not in order) **என்று கடந்த 2018-ஆம் ஆண்டே உச்சநீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் நால்வரே செய்தியாளர்களைச் சந்தித்து கவலை தெரிவித்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது. அந்தச் செய்தியாளர்கள் சந்திப்பு இந்திய ஜனநாயகத்துக்கு உருவாகி உள்ள ஆபத்தை சுட்டிக் காட்டி எச்சரிப்பதாகவே அமைந்தது! ஆனால் அதற்குப் பின்னும் நிலைமைகளைச் சரிசெய்யும் போக்கு தென்படவில்லை!**

பல வழக்குகளில் நீதிமன்றங்களின் செயல்பாட்டில் நேர்மைத் தன்மை – வெளி அழுத்தங்கள் காரணமாகத் தள்ளாடுகிறதோ என்று பொதுமக்களால் எண்ணிடத் தோன்றுமளவு அதன் செயல்பாடுகள் அமைந்ததைக் காணமுடிந்தது! உச்சநீதிமன்றம் தெரிவித்த பல கருத்துகளில் இதன் உணர்வு தென்பட்டது!

**“தனி மனித சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய தன் அவசியத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. நியாயமான காரணமின்றி நியாயமான ஜாமீன் மறுக்கப்படக் கூடாது – இந்த உரிமை நாகரிக குற்றவியல் நீதி அமைப்பின் இன்றியமையாத அங்கமாகும்”**

(Time and again the supreme court emphasized the need to protect personal liberty and held that the right not to be denied reasonable bail without just cause an essential element of criminal law)

– உச்சநீதிமன்றம் தெரிவித்த இந்தக் கருத்துகள் நடைமுறையில் பல வழக்குகளில் செயல்பட முடியாது உள்ளதைக் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம்.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஒரு நிகழ்ச்சியில் பேசும் போது, குற்றவியல் நீதியில் (criminal justice system) முக்கிய அடிப்படையான விதியே பெயில் தான்; ஜெயில் அல்ல! (Bail not Jail) என்று பேசியது பெரிய அளவில் ஏடுகளிலும் ஊடகங்களிலும் செய்தியாக வெளிவந்துள்ள நிலையில், நடப்பில் அந்தக் கருத்தை பல நீதிமன்றங்கள் கடைப்பிடிப்பதில்லை என்பது நீதித்துறையின்மீது ஒருவித நெருடலை ஏற்படுத்துவதாகவே உள்ளது.



**குற்றவியல் சட்டத்தை அணுகும் முறையில், உச்சநீதிமன்றம் உட்பட பல நீதிமன்றங்கள் இன்று அணுகிடும் முறையைக் காணும் போது – நீதிமன்றங்களிலும் இருள்சூழ்ந்த நிலை உள்ளதோ என்ற ஐயப்பாடு உருவாகிறது.**

சிலர் மீதான வழக்கு விசாரணை; அவர்கள் சிறைப் படுத்தப்பட்டு பல மாதங்களாகியும் தொடங்கப்படாத நிலையில், நீதிமன்றங்கள் இவர்களைக் குற்றவாளி எனத் தீர்மானிக்காத போதும், இவர்களின் சிறைவாசம் நீடித்துக் கொண்டிருக்கிறது.

**ஜனநாயகம் ஆபத்தில் உள்ளது என்று உச்சநீதிமன்றத்தின் நீதியரசர்கள் குற்றம் சாட்டியதை தொடர்புபடுத்திப் பார்த்தால் அரசியல் அதிகாரம் படைத்தோருக்கு நீதித்துறையும் தலைதாழ்ந்து நிற்கிறதோ? சில அழுத்தங்களுக்கு கட்டுப்பட வேண்டிய நிலையில் உள்ளதோ? – என்பன போன்ற கேள்விகள் மக்கள் மனதில் எதிரொலிக்கவே செய்கிறது. இந்தக் கேள்விகளுக்கு உரிய பதிலைத் தேடிப் பார்த்தால் மறுப்பதற்கு சரியான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.**

நாட்டில் உள்ள இந்தச் சூழலில்தான் பில்கிஸ் பானு வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்தத் தீர்ப்பை இருள் சூழ்ந்த வேளையில் நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாக முதல்வர் கருதியுள்ளார் என எண்ணிடத் தோன்றுகிறது.

பில்கிஸ் பானு வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒளிக்கீற்றாகத் தோன்றினாலும், அந்த ஒளி நீடிக்குமா என்பது சந்தேகமே!

அந்தச் சந்தேகத்தை நாம் எழுப்பவில்லை. கடந்த கால நிகழ்வுகளை நினைவூட்டி பில்கிஸ் பானுவின் மாமா அப்துல் ரசாக் மன்சூரி எழுப்பியுள்ளார்! இந்தக் கொடூர வழக்கு விசாரணையில் நேரடி சாட்சியாக (Eyewitness) இருந்தவர்; அவர்!





உச்சநீதிமன்றம் ‘குற்றவாளியை விடுவித்தது தவறு’ என்று கூறிவிட்டது. குற்றவாளிகள் சிறைவாசத்துக்கு அனுப்பப்பட்டாலும் அவர்கள் சிறையில் அடைக்க வைக்கப்படுவார்களா என்ற சந்தேகத்தை அவர் எழுப்பியுள்ளார். அவர்களுக்கு முதலில் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி அவர்கள் முழுச் சிறைவாசம் அனுபவிக்கவில்லை. பல ஆண்டு காலம் அந்த மாநில அரசின் கருணையால் சிறைக்கு வெளியேதான் இருந்தார்கள். இப்போது கூட இந்தத் தீர்ப்பிற்குப் பிறகு அந்தக் குற்றவாளிகள் தலைமறைவாகிவிட்டதாகச் செய்திகள் வருகின்றன!



**அந்தக் குற்றவாளிகளுக்கு அந்த மாநில அரசு இத்தனை சலுகைகள் அளிப்பதின் பின்னணி என்ன? இந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக, அன்று குஜராத் கலவரப் பகுதியைப் பார்வையிட்ட அன்றைய பிரதமர் வாஜ்பாய் குறிப்பிட்டபடி, ராஜ தர்மத்தைக் கடைபிடிக்கத் தவறிய படுபாதகர்கள் உள்ளனர். அவர்களில் சிலர் இன்றும் உயர்பதவிகளில் அமர்ந்து இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.**

இவர்கள் அகற்றப்படும்வரை பில்கிஸ் பானு போன்றோருக்கு முழு விடிவு இல்லை –உச்சநீதிமன்றத் தீர்ப்பில் இன்று காணப்படும் ஒளிக்கீற்றை மீண்டும் இருள் கவ்விடும்!

**அரசியல் போலி வேடதாரிகளின் ஆட்டத்துக்கு முடிவுகட்ட விழியுங்கள்!**

**ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு எதிராக எழுங்கள்!**

**ஏற்றமிகு புதிய வரலாறு படைக்கத் தயாராகுங்கள்!**